Dharmapuri

# காலாண்டுத் தேர்வு - 2025

வகுப்பு : 12
காலம் : 3.00 மணி

## பொதுத்தமிழ்

பதிவு எண் :
மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள்:** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்தநடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 14×1=14

1. "நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது" என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது –
(அ) சூரிய ஒளிக்கதிர் (ஆ) மழைத்துளிகள்
(இ) மழை மேகங்கள் (ஈ) நீர்நிலைகள்

2. 'குடும்பம்' என்னும் சொல் முதன்முதலில் இடம்பெற்றுள்ள நூல் _______
(அ) புறநானூறு (ஆ) தொல்காப்பியம்
(இ) திருக்குறள் (ஈ) குறுந்தொகை

3. வையகமும் வானகமும் ஆற்றலரிது – எதற்கு?
(அ) செய்யாமல் செய்த உதவி (ஆ) பயன்தூக்கார் செய்த உதவி
(இ) தினைத்துணை நன்றி (ஈ) காலத்தினால் செய்த நன்றி

4. "இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக" என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது _______
(அ) அவமானம் (ஆ) வக்கிரம் (இ) வஞ்சனை (ஈ) இவை மூன்றும்

5. "செம்பரிதி..." எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள கவிதைத் தொகுப்பு _______
(அ) சர்ப்பயாகம் (ஆ) சூரியநிழல் (இ) நிலவுப்பூ (ஈ) ஒளிப்பறவை

6. சென்னை வெறும் நகரம் மட்டுமன்று, அது நம்பிக்கை மையம் – காரணம் _______
(அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
(ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
(இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை
(ஈ) அ, ஆ, இ – அனைத்தும்

7. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தெரிவு செய்க.
(அ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
(ஆ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.
(இ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.
(ஈ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.

8. தடக்கையான் – இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு _______
(அ) உரிச்சொல்தொடர் (ஆ) வினைத்தொகை
(இ) உம்மைத்தொகை (ஈ) இடைச்சொல் தொடர்

9. தமிழில் _______ பாகுபாடு பொருட்குறிப்பு அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
(அ) பால் (ஆ) திணை (இ) இடம் (ஈ) எண்

10. நடுவண் அரசு தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழியாக அறிவித்த ஆண்டு _______
(அ) 2004 (ஆ) 2006 (இ) 2012 (ஈ) 2014

11. ஒருவருடைய செல்வம் குறையாமலிருக்க குறள் கூறும் வழி யாது?

(அ) பிறர் பொருளைக் கவரும் செயல்களைச் செய்தல்.

(ஆ) பிறர் செய்த உதவியை மறக்காமல் இருப்பது.

(இ) பிறருடைய கைப்பொருளை விரும்பாதிருத்தலாகும்.

(ஈ) தம் ஐம்புலான்களையும் வெல்லுதல்.

12. மருதன், புதியதாகத் தமிழ்ப் பள்ளி ஒன்றை நிறுவ திட்டமிடுகிறார். அப்பள்ளி பாரதியார் விரும்பிய வகையில் வளர வேண்டுமென்று ஆசைப்படுகிறார். அவருக்கு நீங்கள் பின்வருவனவற்றுள் எந்த ஆலோசனையைப் பரிந்துரைப்பீர்கள்?

(அ) அப்பள்ளியில் நவீன இயந்திரங்கள் இடம்பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) வீதிதோறும் பள்ளிகள் திறக்க வேண்டும்.

(இ) ஆணுக்கும் பெண்ணுக்கும் தனித்தனிப் பள்ளிகள் தொடங்க வேண்டும்.

(ஈ) அப்பள்ளியில் நவீன கலைகள் எல்லாம் பயிற்சியளிக்க வேண்டும்.

13. வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாகச் சூடும் பூ ---

(அ) கொன்றைப்பூ (ஆ) வாகைப்பூ (இ) தும்பைப்பூ (ஈ) காந்தள் பூ

14. பால் காட்டும் விகுதி இல்லாத சொல்லைத் தேர்க.

(அ) பாடினாள் (ஆ) வந்தார் (இ) தந்தை (ஈ) சென்றான்

## பகுதி – II

### பிரிவு –1

எவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக. 3×2=6

15. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.

16. கூதிர்ப்பாசறை என்றால் என்ன?

17. 'முயல்வாருள் எல்லாம் தலை' என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?

18. இராமன் சுக்ரீவனிடம் கூறிய செய்திகளை எழுதுக.

### பிரிவு – 2

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×2=4

19. இந்தோ – சாரசனிக் கட்டடக்கலை – குறிப்பு வரைக.

20. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு எழுதுக.

21. தமிழர்களின் வரலாற்றில் 'இருண்ட காலம்' என மரபுவழிப்பட்ட வாரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடும் காலம் எது?

### பிரிவு – 3

எவையேனும் **ஏழனுக்கு** விடை தருக. 7×2=14

22. கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்கான பொருள் எழுதுக.

(அ) திரு (ஆ) ஏமம்

23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

(அ) விம்முகின்ற (ஆ) தந்தனன்

24. இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்கள் இரண்டினை எழுதுக.

25. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

கலை, களை, கழை

26. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

(அ) வானமெல்லாம் (ஆ) செல்லிடத்து

27. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.

குதிரை, வேகம், ஓடு, தாவு

28. உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

எலியும் பூனையும்போல

29. பொருள்கோள் எத்தனை வகைப்படும்?

30. கலைச்சொல்லாக்கம் தருக.

(அ) Culture (ஆ) Software

**குறிப்பு:** செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.

மொழியின் அடிப்படை அலகுகள் யாவை?

## பகுதி – III

### பிரிவு –1

2×4=8

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக.

31. "கவண்டதனை உடைத்தெழுந்த சிங்கம் போலக்

குளிர்பொதிகைத் தென்தமிழே! சீறி வா, வா!" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

33. எவற்றையெல்லாம்விட நன்றி உயர்ந்தது? – குறள்வழி விளக்குக.

34. கம்பராமாயணம் – நூற்குறிப்புத் தருக.

### பிரிவு – 2

2×4=8

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக.

35. மயிலை சீனி. வேங்கடசாமியின் வரலாற்று ஆய்வுகள் பற்றி விளக்குக.

36. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

37. தமிழர் பரம்பரை குறித்துக் குடும்ப மரம் ஒன்றை வரைக.

38. மணந்தகம் – விளக்குக.

### பிரிவு – 3

3×4=12

எவையேனும் **மூன்றனுக்கு** விடை தருக.

39. (அ) நிரல்நிறை அணியைச் சான்று தந்து விளக்குக.

**(அல்லது)**

(ஆ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்

ஏமப் புணையைச் சுடும்.

– இக்குறட்பாவில் பயின்று வரும் அணியைச் சுட்டி விளக்குக.

40. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

'திராவிட சாஸ்திரி' என்று சி.வை. தாமோதரனாரால் போற்றப்பட்டவர் சூரியநாராயண சாஸ்திரி. இவர், பெற்றோர் தனக்கு இட்ட பெயரான சூரியநாராயண சாஸ்திரி என்ற வடமொழிப் பெயரைத் தமிழில் பரிதிமாற் கலைஞர் என்று பெயர்மாற்றம் செய்துகொண்டார். தமிழ், தமிழர் முன்னேற்றம் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றுவதைத் தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டிருந்தார்.

தமிழை உயர்தனிச் செம்மொழி எனத் தன் பேச்சின்மூலம் முதன்முதலில் மெய்ப்பித்தவர் இவரே. உயர்தனிச் செம்மொழி என்பதற்கு இவர் தரும் விளக்கம், "பலமொழிகட்குத் தலைமையும் மிக்க மேதமையும் உடைய மொழி உயர்மொழி; தனித்து இயங்கவல்ல ஆற்றல் சார்ந்தது தனிமொழி; திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி செம்மொழி; ஆயின் தமிழ் உயர்தனிச் செம்மொழியாம்" என்பதாகும்.

**வினாக்கள்**

1. 'திராவிட சாஸ்திரி' என்று பரிதிமாற் கலைஞரைப் போற்றியவர் யார்?
2. தமிழை, உயர்தனிச் செம்மொழி எனத் தன் பேச்சின்மூலம் முதன்முதலில் மெய்ப்பித்தவர் யார்?
3. சாஸ்திரி என்னும் சொல்லுக்குப் பத்தியில் காணப்படும் தமிழ்ச்சொல் யாது?
4. 'செம்மொழி' என்பதற்கு விளக்கம் தருக.

41. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிக்க.

(தமிழ்ஒளி, அம்பை, கோதை, கவிமணி, மறைமலை அடிகள்)

1. முன்னெழுத்து அரசன்; பின்னெழுந்து தமிழ் மாதம் _________
2. கவிஞர்; ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம் _________
3. தாய்மொழி; ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும் _________
4. தமிழறிஞர்; முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம் _________

42. இலக்கிய நயம் பாராட்டுக.

(மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!

– தண்டி

43. தட்டச்சர் பணி வேண்டி விண்ணப்பம் ஒன்றினை எழுதுக.

## பகுதி – IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 3×6=18

44. (அ) 'சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும்' – இக்கூற்றை முப்பால்வழி விரித்துரைக்க.

**(அல்லது)**

(ஆ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவுநிலையை நும் பாடப்பகுதிவழி நிறுவுக.

45. (அ) மயிலை சீனி. வேங்கடசாமி ஓர் 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்பதனைச் சான்றுகளுடன் நிறுவுக.

**(அல்லது)**

(ஆ) சென்னை 'அறிவின் நகரம்' என்பதைச் சான்றுகளுடன் விவரிக்க.

46. (அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

**(அல்லது)**

(ஆ) 'தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்' என்னும் தலைப்பில் கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை – தாய்மொழிக் கல்வியின் தேவை – தாய்மொழிச் சிந்தனை – கற்கும் திறன் – தாய்மொழிக் கல்வியின் பயன் – முடிவுரை.

## பகுதி – V

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** 4+2=6

(அ) "மாமேயல்....." எனத் தொடங்கும் நெடுநல்வாடைப் பாடலை எழுதுக.

(ஆ) "வையத்துள்....." எனத் தொடங்கும் குறளை எழுதுக.

*************

-3 நவீத். M.Sc. M.Ed.
அல் - அமீன் அறிவகம், பாப்பிரெட்டிப்பட்டி. 9659946409